அறஞ்சார் வாழ்வு

## அறிமுக உரை

**“அரசியல் பிழைத்தோர்க் கறங்கூற்றாவதூம்”** - சிலப்பதிகாரம் இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் வாயிலாக நீதி கேட்கிறார் இளங்கோவடிகளார். இதனை அடிப்படையாகக் கொண்டு இச்சிறிய நூலை எழுதுவதற்கு ஊக்கமளித்தது இளங்கோவடிகளார் காலத்தில் எழுதப்பட்டதாக இருப்பினும் அந்நீதியானது எக்காலத்திற்கும் பொருந்துவதாகும். இன்றைய நவீன விஞ்ஞான காலத்திலும் மக்கள் அரசியல் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு இது ஓர் அடித்தளமாக அமையும் வாசகர்கள் வாசித்துப் பயன்பெற அன்புடன் வேண்டிகிறேன்.


**ஆசிரியர்:**

வடலூர் அ.நடராஜன்

12ஏ, அன்னை அப்பர் தெரு

SS நகர், நல்லாம்பளையம்,

கணபதி (PO),

கணபதி, நல்லாம்பளையம்,

கோவை-641006

9444427982, 9003765740

info@shanthiyoga.in www.shanthiyoga.in

அரசியல் அறஞ்சார் வாழ்வு

## அரசியல் களம்-1

**“அரசியல் பிழைத்தோர்க் கறங்கூற்றாவதூம்”**

சிலப்பதிகாரம் இளங்கோவடிகள்

ஒரு நாட்டின் அரசியல் முறை எத்தன்மை வாய்ந்ததாக இருப்பினும், அதன் அரசியலமைப்பு எவ்வகையாய் இருப்பினும், அந்நாட்டின் நிர்வாகம் சீரானதாகவும் சிறப்பானதாகவும் அமைய வேண்டியது அவசியமாகும். ஒரு நாட்டின் அரசியல் முறை சிறப்பானது என்பதை எடுத்துக்காட்டுவதற்கு சான்றாய் விளங்குவது அந்நாட்டின் ஆட்சி முறை நிர்வாகமாகும்.

ஒரு நாட்டின் அரசியலில் அந்நாட்டு அரசானது ஜனநாயகம், சர்வதிகாரம், கம்யூனிசம், முடியாட்சி இவற்றில் எதனைத் தழுவி அரசாட்சி செய்யினும் “நிர்வாகம் என்கின்ற திறவுக்கோல்” இன்றி அதுதன் அதிகாரத்தைச் செயல்படுத்த இயலாது என்பது தெளிவான முடிவாகும். அரசாட்சி என்கின்ற தேருக்கு அச்சாணியாய் விளங்குவது ஆட்சியின் நிர்வாகம் என்பதாம். அந்நாட்டின் அரசாங்கம் சீர் குலைந்து விடும். மக்கட்சமுதாயமும் அதன் வாழ்வும் சீரழிந்துவிடும். ஒரு நாட்டின் ஆட்சி நல்லாட்சி என்று பாராட்டப்படுகிறது என்றால் அந்நாட்டின் சிறந்த நிர்வாகமே காரணமாகும்.

நாம் நல்லாட்சி என்கிறோம் என்றால் அந்நாட்டின் பாராட்டிதலுக்குரிய நிர்வாகம் அமைவதே காரணமாகும். ஒரு நாட்டின் நிர்வாகப்பணி என்பது அந்நாட்டின் பொது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து அவர்தம் நலனைக் காப்பதற்கு இயங்கும் ஓர் இடையறாத இயக்கமாகும். பொதுமக்களின் நலன் கருத்தில் கொண்டு அரசாங்கம் மேற்கொள்ளும் எந்த விதமானதொரு செயலையும் நிறைவேற்றி தருகின்ற பொறுப்பு மிக்க நிர்வாகத்தை அரசு தன்னுள் கொண்டுள்ளதை நாம் அனைவரும் அறிந்து கொள்ளலாம். இலாப நோக்கமும், சுயநலசார்பும், அடிப்படையாகக் கொள்ளாமல், மக்களின் நலன்சார்ந்த நிர்வாகமாக இயங்குகிறது.

நாட்டில் ஏற்படுகின்ற பஞ்சம், பசி, பட்டினி, விபத்துக்கள், வெள்ளத்தால் ஏற்படுகின்ற அபாயங்களில் இருந்தும், மக்களைப் பாதுகாத்தல் நிலநடுக்கம் சுனாமியினால் ஏற்படுகின்ற பேரிடர்கள், இரயில் விபத்துகள், சாலை விபத்துகள் ஏற்படும் போதும் மக்களைப் பாதிக்கும் போதும் பாதிப்பு ஏற்படும் என்று கருதுகின்ற போதும் மக்களைப் பாதுகாப்பான இடங்களில்

தங்கவைத்து, பாரமரித்து, பாதுகாப்பது அரசின் நிர்வாகத்தின் தன்னலமற்ற தியாக உணர்வேயாகும்.

மக்களின் அத்தியாவசிய அடிப்படை தேவையான உண்ண உணவும், உடுக்க உடை, இருக்க குடியிருப்பு, மருத்துவம், கல்வி, சுகாதாரம், குடிநீர், உணவுபங்கீடு, போக்குவரத்து, வேலைவாய்ப்பு ஏற்படுத்துவது அரசின் நிர்வாகமே ஒரு நாட்டின் மக்களிடையே ஏற்படுகின்ற போட்டி பூசல்கள் ஏற்படும் பட்சம் அமைதிகாக்கச் செய்வதும், குற்றங்களை தடுப்பதும் சட்ட ஒழுங்கை பராமரிப்பது அரசின் நிர்வாகமே இவ்வாறு பொது மக்களின் அன்றாட வாழ்க்கை நடைமுறைக்குத் தேவையான அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வது அரசின் நிர்வாகமே. அரசின் நிர்வாகம் அன்றி வேறு யாரலும் அதை செய்ய இயலாது. வளர்ந்து வரும் இன்றைய நவீன விஞ்ஞான கால நாகரீகத்திற்கேற்ப மக்களின் தேவைகளை பூர்த்திசெய்வது இன்றைய அரசாங்கத்தின் முக்கியமான கடமையாகும். எந்த ஒரு நாட்டின், எந்த ஒரு கட்சி ஆட்சி அமைக்கிறதோ அந்த கட்சி தனது கொள்கை திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பினை நிர்வாகத்திடம் ஒப்படைக்கும். இவ்வாறு யார் ஆட்சிப் பொறுப்பில் வந்தாலும் நிர்வாகத்திடம் செயல் திட்டங்களை ஒப்படைக்க வேண்டியுள்ளது. அரசின் திட்டங்களை செயலாக்கும் இயந்திரமாக நிர்வாகம் செயல்படுகிறது. இவ்வகையில் நிர்வாகம் அரசியல் சார்பற்றதாகவும் அரசியல் கட்சிகளுக்குச் சாதகமாகவோ அல்லது ஆளும் அரசியல் கட்சிகளுக்குச் சாதகமாகவும் நடக்காமல் நடுநிலைமை வகிப்பவராகவும், மறைமுகத்தன்மை இல்லாத தன்மை கொண்டதாகவும் பொது நலன், பொது பொறுப்பு, கொண்ட தன்மையில் நிர்வாகமும் இயங்க வேண்டும். நிர்வாகம் நிலைபெற வேண்டும் எனில் அதன் அடித்தளம் வலிவும் பொலிவும் பெற்று அமைய வேண்டும். ஒரு நாட்டின் மனிதர்களின் உறவுகள் சீரும் சிறப்பும் பெற்று விளங்குவதற்கு சமுதாயத்தொண்டு என்கின்ற ஊக்கமும் உறுதியினையும் நிர்வாகம் கொண்டிருக்க வேண்டும். ஒரு நாட்டில் நம்பிக்கை அற்ற ஆட்சி, நிலையற்ற ஆட்சி, வலிமையற்ற ஆட்சி நீண்ட காலம் நிலைத்திருக்க இயலாது மக்களின் வாழ்க்கையில் இருள் சூழ்ந்து விடும்.

அரசியலில் அரசாட்சி செலுத்தும் செங்கோலை கைப்பற்றியபின் ஆளும் வர்க்கமாக மாறும் ஓர் அரசியல்வாதி அதிகார வர்க்கத்தோடு இணைந்து மக்களின் பால் பொறுப்பற்ற தாக்கத்தை ஏற்படுத்தி அதனால் பல்வேறு விளைவுகளை ஏற்படுத்துகின்ற சூழ்நிலைகள் உருவாகின்றது. இதன் விளைவே தனி மனித சுதந்திரத்தையும் மக்களின் நலன் சார்ந்த உரிமைகளையும் மறுத்தளிக்கப்படுவதற்கு அடிப்படை காரணமாகிறது. மக்கள் சமூகத்திற்கிடையே ஏற்படுகின்ற

முரண்பாடுகளை களைய முற்படுவதில்லை. ஆளும் வர்க்கமும், அதிகார வர்க்கமும் முழுக்க முழுக்க சுயநலவாதியாகவே காணப்படுகின்றார்கள். இவர்களால் எப்படி தனி மனித மற்றும் அவன் சார்ந்த சமூகமும் அவனுடைய நாடும் மற்றுமுள்ள பிற உலக நாடுகள் முழுவதிலும் எப்படி தன்னலமற்ற சமுதாய நலன்கள், தேசிய நலன்கள் மற்றும் உலகளாவிய நலங்களை எப்படி ஏற்படுத்துவார்கள். இவர்களின் அடிப்படை அரசியல் நோக்கமே சுயநலமே பிரதானமாகக் கொண்டு இருப்பதால் அதை விட்டு வெளியே வர இயலாது. சராசரி மனிதன் வாழ்க்கையில் அமைதி, ஒழுங்கு, நீதி, நேர்மை இன்னும் பற்பலவற்றை உருவாக்க அரசியல் நடைமுறை அதற்கு ஏற்றவாறு இருத்தல் அவசியமாகும். இத்தகைய நலங்களை சார்ந்த மனிதன் மற்றும் சமுதாயம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை நாம் உணர வேண்டும். தனி மனிதன் மற்றும் அவன் சார்ந்த சமுதாயமும் தேசம் முழுவதும் நீதியின் அம்சமாக மாற வேண்டும். உலக அரசியல் வரலாற்றில் இதைத் தெளிவாக உறுதிப் படுத்தவேண்டும். அரசியல் என்பது எளிமையான அமைப்பையும் செயல்பாடுகளையும் கொண்டு இயங்குகிறது. ஆனால், இதைப்பற்றிய விமர்சனங்களும் அணுகுமுறைகளும் தீர்வுகளும் அரசியலை சிக்கலான அமைப்பாக எடுத்துக்காட்டுகிறது. விளக்கம் மற்றும் தீர்வுகள் என்ற வகையில் அரசியல் சிந்தனைகள் அரசியல் நடைமுறையை சிக்கலான அமைப்பாகவே கருதுகின்றன. அதன் காரணமாக உள்ளே நுழையும் ஆளுமை கொண்ட அரசியல்வாதியும் அதிகார வர்க்கங்களும் இணைந்து இதை மேலும் சிக்கலாக்கி விடுகிறார்கள். அரசியல் கருத்து, சுதந்திரம், அரசியல் தத்துவம், அரசியல் சிந்தனைப்போக்கு இவை பண்டைய மரபு வழியை சுமந்து கொண்டு வருகிறது. பண்டைய மரபு வழியைப் புறக்கணித்துப் புதிய மரபு என்ற நவீன தத்துவம் புதிய சிந்தனை அமைப்பு சுதந்திரமான அமைப்பாக உருவாவதில் பல்வேறு தடைகள் உண்டு. நீதி, நேர்மை, நன்மை, ஒழுங்கு, சமத்துவம், அமைதி போன்ற மதிப்பு மிகுந்தவைகளை மக்களாட்சி முறை எளிதாக ஏற்படுத்தக்கூடியது என்று நவீன தத்துவம் கருதியது. ஆனால், உலக அரசியலில் தேச சர்வதேச உறவுகள் வெளிப்படையாக அமையாமல் ஆட்சியாளர்களின் விருப்பத்திற்கு ஏற்ப அமைந்து விடுகின்றன. இது அதிகாரவர்க்க சிந்தனையின் வெளிப்பாடாகும்.

அரசியலில் மரபுசார் அரசியல் தத்துவமும் நவீன அரசியல் தத்துவமும் அரசியல் சிந்தனைகளை கடந்து பல கோட்பாடுகளையும், கடந்து பல அணுகுமுறைகளையும் கடந்து பலமுன் மாதிரிகளை உருவாக்கியுள்ளது. இம்முயற்சியின் பயனாக மனிதனின் தன்னலசிந்தனையானது வியக்கத்தக்க மாற்றத்தை

உலகில் ஏற்படுத்தி உள்ளது. இதை நாம் ஆராய்ந்தால் பல பிரச்சனைகளை புரிந்து கொள்ள முடியும். அரசியலில் பங்கேற்பவரின் உண்மையான மனப்பாங்கு என்ன என்பதையும் அவரின் எதிர்பார்ப்பு, அந்தரங்கம் போன்றவைகளை நாம் அறிந்து கொள்வது மிக அவசியமாகிறது. அதிகாரவர்க்கம் தன்நலம் சார்ந்தும் பின் தன் சார்ந்த பாதுகாப்பு அதன் பின் சர்வதேச நலன் பாதுகாப்பு என்ற அடிப்படையிலேயே கொள்கைகளை உருவாக்குகின்றனர். இவர்களின் சிந்தனையில் இருந்து வரும் அரசியல் மதீப்பீடுகளையோ அரசியல் விமர்சனங்களையோ ஏற்பதில்லை அங்கீகரிப்பதும் இல்லை. சமுதாயம் தேசம் தனி மனிதர் ஆகியோர்களின் வாழ்வில் அமைதி ஒழுங்கை கொண்டு வரும் போது தான் உலக நாடுகளில் ஏற்படும் போர்கள் அனைத்துமே சிறியதொரு ஆதாயத்திற்காக மிகப் பெரிய இழப்பை ஏற்படுத்தி நூற்றுக்கணக்கான பல்லாயிரக்கணாக்கான மக்களையும் போர்வீரர்களையும் கொன்று குவித்துள்ளதை கடந்த கால வரலாற்றின் மூலமாகவும், நேரடியாகவும், மறைமுகமாகவும் நிழல் யுத்தம் நடைபெறுவதை இன்றும் கண் கூடாகக் காணலாம். மண்ணின் மைந்தர்களை தன் சொந்த மண்ணிலையே வீழ்த்தி மாய்க்கும் தவறை அது செய்கிறது. உலக அமைதியை சீர்குழைத்து அருகருகே உள்ளா நாடுகளின் பரஸ்பரம் நம்பிக்கை அற்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டு உறவுகளில் சிக்கலை ஏற்படுத்திவிடுகிறது .

தேசியம் சர்வ தேசியம் மற்றும் விடுதலைப் போராட்டம் போன்றவை வன்முறையை நியாயப்படுத்தியதையும் மறுக்கமுடியாது. தனது தேச மக்களை ஒன்று படுத்துவதற்காக தேசியம் என்று கூறுகின்றார்கள். இதனால் மக்களை ஒன்றுபடுத்த உதவும். ஆனால், இது பிற தேசங்களின் மீது வெறுப்பை ஏற்படுத்துகின்றன. இது இன்றைய உலகில் எல்லா நாடுகளிலும் காண முடிகிறது. பிற நாடுகளில் மனிதர்களைக் கொல்வது, பிற தேசங்களை வஞ்சிப்பது, வழிமுறைகளைப் பாரமல் மூர்க்கத்தனமாக தனது இலக்கை அடைவது போன்றவை உலக அரசியலில் மேன்மையாகக் கருதப்படுகிறது அல்லது அங்கீகரிக்கப்படுவது மனிதர்களை பாரபட்சமாக நடத்துவது, அடிப்படை உரிமைகளைப் பறிப்பது இனவெறி, நிறவெறி மற்றும் வேற்றுமை காட்டுவது பெண்களுக்கு எதிரான கொடுமைகள், சமூக அநீதி இவைகள் உலக அளவில் நியாயப்படுத்தி பேசப்படுகின்றன உலகில் சமாதானம் நீதிபோன்ற போதனைக்குப் பஞ்சமில்லை. அவற்றுக்கான இயக்கத்திற்கும் அதன் தலைவர்களுக்கும் பஞ்சமில்லை. அந்தோ பரிதாபம் நாட்டின் வன்முறையின் அளவு நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே

போகிறது. நீதிநெறி கருத்துக்கள் சமயங்கள் சமய போதனைகள் சமய போதகர்கள் மத போதகர்கள் ஆகியோர்கள் இருந்தும், அதற்குரிய சட்டங்கள் இருந்தும் வெறுப்புணர்வு, வன்முறை குறையவும் இல்லை. இதை யாரும் மறுக்க இயலாது.

தேசியம் என்பதும் சர்வதேச நலம் என்பதும் சமுதாய நலன் என்பதும் ஒரு சிலரால் தீர்மானிக்கப்பட்டு தேசத்தின் மீதும், அத்தேச மக்களின் மீதும் வலுக்கட்டாயமாக திணிக்கம்பட்டதாகும். அதுபோல சமுதாய நலன் என்பதும் சமூக ஆதிக்கம் பெற்ற ஒரு சிலராலே உருவக்கப்பட்டு தன் சமூகத்தினரிடம் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படுவதேயாகும். ஏற்கனவே உள்ள பழைய மரபுகளை மையப்படுத்தி புதிய உலக அரசியலை உருவாக்க சிலர் முயற்சிக்கின்றனர் இன்னும் சிலர் பழைய மரபுகளை தாண்டி சிந்திக்கின்றனர். உலக அரசியல் சித்தாந்த வளர்ச்சி பல பரிணாமங்களை கொண்டிருந்தாலும் அடிப்படை இயக்கம் ஒன்றாகவே உள்ளது. ஒருவர் மற்றொருவர் மீது ஆதிக்கம் செலுத்த முற்படுவது அல்லது ஆதிக்கம் செலுத்துவது, ஒருவர் மற்றொருவரை அழிக்க நினைப்பது அல்லது அவரை அழிப்பது என்ற அடிப்படை தன்மை மற்றும் அரசியலின் எதார்த்தமான இந்த நடைமுறை உலகெங்கிலும் காணப்படுகிறது என்று இவன் மற்றவர் மீது ஆதிக்கம் செலுத்துவதை நிறுத்துகிறானோ என்று இவன் பிறரை அழிக்க நினைப்பதை நிறுத்துகிறானோ என்று இவன் தன் போர்க்குணமுள்ள சிந்தனையில் இருந்து விடுபடிகிறானோ அன்றுதான் போர் மேகங்கள் இந்த உலகை விட்டு ஓடி விடும் போர் அற்றதொரு உன்னதமான சமுதாயத்தையும், போரில்லாத பகையில்லாத ,வஞ்சமில்லாத, வெறுப்புணர்வற்ற “எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க” என்ற இராமலிங்க அடிகளாரின் ஒப்பற்ற உலகை காணலாம் என்ற இராமலிங்க அடிகளாரின் கூற்றை நினைவு கூர்வோம்.

அரசியல் நடைமுறையில் மக்களாட்சி எவ்வாறு செயல்படிகிறது? அதிகார அமைப்புகள் எந்த வகையான மக்களின் நலனுக்கு செயல்படிகிறது. அரசியல் கட்சிகள் மக்கள் ஆட்சியை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதை நாம் சற்று ஆராய்வோமானால் மிகதெளிவாய் புரிந்து கொள்ள இயலும் மக்கட் சமுதாயத்தில் மக்களின் வாழ்க்கை வளம், மக்களின் பாதுகாப்பு, மக்களின் மதிப்பு மிக்க அதிகாரம் பகிர்ந்தளித்தல், மக்களின் நலன் சார்ந்த பொது நோக்கம், மக்கட் சமூகத்தின் அமைதியான சூழல் வாழ வகை செய்தல், மக்களின் பொருளதார ஏற்ற தாழ்வுகளை களைதல், மக்களின் கல்வி மருத்துவம், மக்களின் குடியிருப்பு, சுகாதாரம் பேணுதல் மக்களின் உரிமைகளை காத்தல் மக்களின் நீதி நேர்மை நெறிகளை

சமுதாயத்தில் நிலை நிறுத்தச் செய்தல் இவை இன்றைய உலகில் மிக முக்கியமானதாகும்.

இன்றைய நவீன அரசியலில் அதிகாரவர்க்கம் தன் முனைப்பும் தனிமனித தத்துவமும் தான் மிக அதிகமாக அதிகரித்துப் பரவியதன் விளைவாகவே மக்களாட்சி என்ற கருத்தை எல்லோரும் தாராளமாக பயன்படுத்தி அரசியலில் பேராசையை அளவுக்கு அதிகமாகவே வளர்த்திவிட்டதின் காரணமாக பரஸ்பரம் நம்பிக்கையின்மை, நேர்மையின்மை மிகக்குறைந்து போயுள்ளன. மேலும் வளர்ச்சியும், வீழ்ச்சியும், பலமும் பலவீனமும், பதற்றமும், பொய்யும், அநீதியும், அதர்மமும் எங்கும் வியாபித்துள்ளது. பேராசைகளினால் தான் அழிவுக்கு காரணமாகிறது என்று பகவான் புத்தரின் கருத்தை இங்கு நினைவு படுத்துகிறேன். உலக வாழ்விலும் சரி தேசங்களும் , சர்வ தேசங்களும் புத்தரின் கருத்தை சிந்திக்க வேண்டும் இல்லையெனில் இவ்வுலகம் அழிவை நோக்கி பயணத்தைத் தொடரும். வரலாற்றில் நிகழ்வு போக்குகளை உற்று நோக்க வேண்டும். அரசாங்கத்தின் தலை விதியை மக்களாட்சியில் ஏதேனும் ஒரு அரசியல் கட்சியோ அல்லது அதன் தலைவரோ நிர்ணயிக்கலாம் அல்லது அது தலைவிதியை மாற்றி அமைக்கலாம்.

சமுதாயம் மனிதர்களால் ஆனது அரசாங்கமும் மனிதர்களால் ஆனது சமுதாய மேம்பாட்டிற்கு ஒற்றுமை அவசியம். சமுதாயம் பொது நலனைச் சார்ந்த குறிக்கோளைக் கொண்டதாகும் பல இலட்சியங்களை உள்ளதாக இருக்கும். அரசாங்கத்திற்கு சில பொதுவான குறிக்கோளைக் கொண்டுள்ளது அரசாங்கம் மேம்பாட்டை அடைய கடமை உணர்வு, ஊழல் அற்ற நிர்வாகம், நேர்மை உழைப்பு, உண்மை நிர்வாக ஒற்றுமை இவைகள் அவசியமாகும். சமுதாயத்தின் நோக்கங்களை நிறைவேற்று முகமாக அரசங்கம் இருக்க வேண்டும்.

அரசியலில் நிலவுகின்ற பல்வேறு பிரச்சனைகளைத் தீர்க்க வரலாற்று ரீதியிலான அணுகுமுறை அவசியமாகும். ஒரு சமுதாயத்திலோ அல்லது ஒரு அரசங்கத்திலோ வேரோடிய பல்வேறு பிரச்சனைகள் இருக்கலாம் அவற்றை தீர்க்க அரசியல்வாதிகள் அரசியல் தலைவர்கள் அரசாங்கம் அதிகாரவர்க்கம் அவற்றின் வரலாற்றை படித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எச்சரிக்கையான செயல் முறைகளை மேற்கொள்ள வரலாறு பல பாடங்களை கற்பிக்கிறது. இப்பாடங்கள் அரசாங்கத்திற்கும், அரசியல்வாதிக்கும் அதிகாரவர்க்கத்திற்க்கும் மிகுந்த பயனளிப்பதாகும். மனிதன் காலத்திற்கேற்ப தங்களின் எண்ணங்களையும் நடை, உடை,

பாவனைகளையும் வாழ்க்கை முறைகளையும் மாற்றிக் கொள்கிறான். இந்த மாற்றமானது அரசியலிலும் பிரதிபலிக்கிறது. மனித சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்களை அரசியல்வாதியும், அரசாங்கமும் அதிகார வர்க்கமும் புரிந்து கொள்ள வேண்டும். அரசியலில் எப்பொழுது வேண்டிமானாலும் மாற்றம் நிகழலாம் என்பதைப் புரிந்து கொண்டு வரலாற்றின் அதிகார வர்க்கம் என்ற சொல் வரலாற்றுச் சிறப்புமிக்கதொரு சொல்லாகும். இது அரசாட்சிமுறை தோன்றிய காலந்தொட்டு இன்றைய உலகில் எல்லா நாடுகளில் ஒரு நிலையான இடத்தைப் பிடித்துக் கொண்டது. அதிகார வர்க்கம் இல்லையெனில் ஆட்சியுமில்லை அரசாங்கமும் இல்லை என்ற நிலை ஏற்பட்டு விட்டது.

அரசாங்கத்திற்கு அதிகாரம் இன்றியமையாததும் தவிர்க்க இயலாததாகி விட்டது. மாறி மாறி வரும் அனைத்து ஆட்சி முறை காலங்களில் ஆட்சி புரிவோருக்குப் பின்னால் சூத்திரதாரியாக இருந்து அவர்களையெல்லாம் இயக்கியது. இந்த அதிகாரவர்க்கமே என்றால் மிகையாது. உலகில் மக்கள் சமூகம் என்று சமுதாய உணர்வு பெற்றுக் கூட்டு வாழ்வியலை மேற்கொண்டொழகினானோ அன்றே அவன் ஆட்சிமுறை தத்துவமும் அதிகாரமும் செலுத்திஆளுமை புரியும் வாழ்க்கையை கற்றுக் கொண்டான் அதை ஏற்றுக் கொண்டு தனது வாழ்க்கைப் பயணத்தையும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றான். இன்றளவும் அவன் வாழ்ந்து வருகிறான் உலக நாகரீகத் தொட்டில் எனப்படும் கிரேக்கம், எகிப்து, ரோமாபுரி, சீனம், சிந்து கங்கை சமவெளியில் வாழ்ந்த மக்கள் சீரான செம்மையான ஆட்சி முறைகளால் ஆளப்பட்டனர் என்று உலக வரலாற்று ஆய்வுகள் கூறுகின்றது.

“அதிகார வர்க்கம் நாளுக்கு நாள் ஆக்கமும் வளமும் பெற்று செழித்தோங்குகிறது” அதிகார வர்க்கமானது இன்னமும் அதன் போக்கிலேயே போய்க் கொண்டிருக்கிறது. மக்களின் பிரதிநிதியாக வருபவர்கள் தங்களின் உயர்ந்த மேலான பொறுப்புமிக்கப் பதவியில் அமருகின்ற பொழுது நற்சிந்தனையின் விளைவாக மக்களின் வாழ்வாதாரங்களை காக்கும் ஓர் காவலனாக தன்னை முன்னிலைப் படுத்திக் கொள்ளும் ஓர் சிறந்த பண்பாளராக மக்களால் போற்றப்படுகின்ற உத்தமராக தங்களை நிலைநிறுத்தவேண்டும் உத்தமனாக ஓங்கு என்று இரமலிங்க அடிகளார் கூறியதை இங்கு நினைவு கூர்கிறேன்.

அதிகார வர்க்கமானது தனது தன்மைகளை மாற்றிவிடும் இல்லையெனில் வேதாளம் கூறும் பட்டி விக்கிரமாதித்தன் கதைபோலத் தொடரும். அதிகாரம் என்பது மக்களை ஒற்றிணைத்து பொது நலத்திற்காக செய்யப்படும் ஒரு நடவடிக்கையாகும் அதிகாரத்தைக் கைப்பற்றி அரசியலில் நுழைபவர்கள் மேற்கண்ட்தொரு நடவடிக்கைக்கு (பொதுநலன்)

சேதம் விளைவிக்காமல் அதற்கு மாறுபாடில்லாமல் அந்நடவடிக்கைக்கு துணை புரிபவராகவும் அப்பொதுநலவாதியாக நடைமுறையில் திகழ வேண்டும். இல்லையெனில் அடிப்படை காரணியாகத் திகழும் பொது நோக்கத்திற்கு மிகப்பெரிய ஆபத்தாகவே மாறிவிடும். ஆகவே தான் இளங்கோவடிகள் தன் காப்பியமான சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் வாயிலாக அரசியல் பிழைத்தோர்க்கறங்கூற்றாவதூம் என்றார். இந்த ஒப்பற்ற அறம் இவ்வுலகில் என்றென்றும் நிலைத்திருக்கும் என்பதை நாம் உணரலாம்

<u>அரசியல் களம்-2</u>

**“அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதூம்”**-சிலப்பதிகாரம் இளங்கோஅடிகளார்

அரசு, அரசாங்கம் , அரசியல் எங்கின்ற இம்மூன்றும், ஒரு பொருளையே குறித்து ஒரேத் துறையை சார்ந்து ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாகவும் அத்துறை, துறை சார்ந்த நிலையும், அதன் நிலைப்பாடுகளை உள்ளடக்கி ஒருங்கிணைக்கப்பட்டு, ஒன்றை ஒன்று பிரித்து வேறுபடுத்த இயலாததாகவும் மக்கள் நலனே பிரதான நோக்கமாக்க் கொண்டு உருவாக்கப்பட்டு, பல்வேறு துறைகளாக விரிவடந்தது. இதில் முக்கிய கூறுகளாக அரசியல், சட்டம், பொருளாதாரம், கல்வி , மொழி, வாணிபம், விவசாயம் பண்பாடு கலை உள்ளிட்ட இத்துறைகள் மிக முக்கியத்துவம் வாய்ந்த்தாக விளங்கியது. இது மன்னர் ஆட்சி காலந் தொடங்கி இன்றைய மக்கள் ஆட்சி முறையிலும் மிக முக்கியத்துவம் பெற்ற துறைகளாக விளங்கி வருகிறது. இன்னும் பல பிரிவுகள் உள்ளடக்கி உள்ளது. உலகில் உள்ள அனைத்து நாடுகளிலும் இத்துறை மிக முக்கியத்துவம் வாய்ந்த்தாக விளங்கி வருகிறது. அரசாட்சி செலுத்துவதற்கு வரும் மன்னனும் சரி, இன்றைய விஞ்ஞான காலக் கட்டத்தில் வரும் அரசியல் கட்சிகளும் , ஒன்றைப் புரிந்து கொள்ள தவறி விடுகின்றனர். மக்களின் நலனே பிரதான நோக்கம் என்கின்ற உயரிய கோட்பாடு நெறி முறைகளை, மக்களுக்காக அரசு மக்களுக்காக அரசாங்கம், மக்களுக்காக அரசியல் என்பதை மறந்தனர், தம் மக்களையும் மறந்தனர் அந்தோ!

மக்களின் வாழ்வாதாரங்களை மையப்படுத்தி அவ்வகை ஆதார நிலைகளை தனித்தனியாகப் பிரித்து தனித்தனி துறைகளாக்கி துறையும் துறைச்சார்ந்த நிர்வாகமும் உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு துறையும் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரு தலைமையின் கீழ் இணைக்கப்பட்ட நிர்வாகமாக மாறியது. இங்ஙனம் பரிணாமித்து அந்நிர்வாகத்தை , நிர்வாகிக்க அதிகாரிகளை அரசாங்கம் ஒவ்வொரு துறைகள் தோறும் நியமித்து

இங்ஙனம் நியமிக்கப்பட்ட அவ்வரசாங்கம் அதிகாரிகளுக்கு தத்தம் துறைகளை நிர்வாகம் செய்வதற்கு அதிகாரமும் அளிக்கப்பட்டது. அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒரு அரசு அதிகாரிக்கு தான் சார்ந்த துறை முழுவதும் அவருடைய நேரடிக் கட்டுப்பாட்டிற்குள் சென்று விடுகிறது. மேற்படி அத்துறை முழுவதும் ஆளும் அதிகாரமும் உடையவராக அவ்வதிகாரி மாறி விடுகிறார். துறை சார்ந்த அவ்வதிகாரி அரசாங்கத்தின் நேரடித் தொடர்புடையவராகவும், அரசாங்கத்தின் ஆணைகளை உடனுக்கு உடன் நிறைவேற்றுபவராகவும், அரசின் கட்டளைக்கு கீழ்ப் பணிந்து நடக்க கடமைப் பட்டவராகவும் ஆகி விடுகிறார். அரசு அதிகாரிகள் அரசாங்கத்தின் எண்ணங்களை புரிந்துக் கொண்டு செயல்படுபவராகவும், அரசாங்கத்தின் எண்ணம் செயல் நோக்கங்களை பூர்த்தி செய்யக் கூடிய ஒரு அரசு அதிகாரியாக மாறிவிடுகிறார். மக்களுக்கு அரசின் நிலைப்பாடுகளை வெளிப்படுத்திக் காட்டிவதும், மக்களின் எண்ணங்களையும், மக்களின் எதிர்ப்புகளையும், மாட்சியை பொருத்திய அரசாங்கத்திற்கு தெரிவிக்க்க் கூடியவராகவும், அரசாங்கத்திற்கு பயனுள்ள ஓர் அதிகாரியாகவும், முற்றிலும் மாறி நம்மில் வேறுப்படுகிறார். அரசாங்கத்தின் திட்டங்களை மக்களிடையே கொண்டு சென்று அதைச் செயல்ப் படுத்தி நடைமுறைக்கு வரவும் நடைமுறைப் படுத்தும் அதிகாரியாக மாறி அரசின் மேலாண்மை பெற்ற முழு அதிகார வர்க்கஞ்சார்ந்த, வர்க்க ரீதியிலான அதிகார வர்க்க அதிகாரியாக பரிணாமித்து மாறி விடுகிறார். இப்படி மெல்ல சாதாரணமாக மக்களிடம் செல்லத் தக்க வகையில் மக்களுக்கு கிடைக்கப் பெறுகின்ற பயன்பாடுகளை மக்களின் நாடி பிடித்தறிந்து நாடாளும் அரசாங்கத்தின் மேலான கவனத்திற்கு கொண்டு செல்லுகின்ற அதிகாரியாகிறார். ஒப்புயர்வு பெற்ற மேலாண்மை மிகு ஆக்கம் பெற்றவராகி செங்கோல் செலுத்த கடமை பெற்ற ஒரு அதிகாரி தனக்கு வழங்கப்பட்ட துறைச் சார்ந்த நிர்வாக அதிகாரம் பெற்றப்பின் தான் யாரென்றும், எதற்காக இத்துறைகள் நமக்கு கொடுக்கப்பட்டன. துறையின் பணி என்ன? நாம் மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமை என்ன என்பதை எல்லாம் மறந்து தான் சார்ந்த, தனது குடும்ப உறவுகளை கட்டிக் காப்பதிலும், தனக்கு அரசாங்கம் அளித்த அதிகாரத்தை கையில் எடுத்து அரசாங்கத்திற்கு தலைமையேற்றிருக்கும் அரசியல்வாதிகளோடு, கை கோர்த்து கொண்டு, கொஞ்சி, குலாவி தான் சார்ந்த சமுதாயத்திற்கும் மக்கள் சமூகத்திற்கும் மக்களின் பால் சமூக நீதி மாறாமல் பணி ஆற்ற வேண்டிய அதிகாரி மக்களுக்காக மக்களால் நியமிக்கப்பட்ட ஒரு அரசாங்கம் என்று சொல்லிக்கொள்கின்ற அரசின் கீழ் மக்களுக்காக நியமிக்கப்படும், ஒரு அரசு துறை அதிகாரி

மக்களை ஏமாற்றும் வித்தையை அரசியல் வாதிகளுக்கு கற்றுக் கொடுக்கிறார்.

அரசு அதிகாரிகள் ஏமாற்றும் வித்தையை அரசியல்வாதிகளுக்கு கற்றுக் கொடுத்த உடன் அரசியல்வாதிகள் விழித்துக் கொள்கிறார்கள். அரசியல்வாதியும், அரசு அதிகாரிளும் ஒன்றாக இணைந்து விடுகின்றனர். அரசதிகாரியும், அரசியல்வாதிகளும் இணைந்த பின் கேட்க வேண்டுமா, இருவரும் கைகோர்த்து கூட்டு கொள்கையை துவக்கினார் என்றால் மிகையாகாது. கூட்டுக் கொள்கை என்பது சர்வசாதாரணமாயிற்று. நாட்டையும், மக்களையும் பாதுகாக்கவேண்டியவர்கள் இப்படி பகல் கொள்ளையர்களாக மாறியதன் விளைவு தான், இன்று நம் நாடெங்கிலும் ஊழல் மலிந்து போய் நிர்வாகம் சீர்க்கெட்டுப் போனது. இனி இதை சீர்ச் செய்ய யாராலும் இயலாது என்பது ஓர் நிதர்சனமான உண்மையாகும். நாடு சுதந்திரம் பெற்று ஐம்பதாண்டுகள் கடந்து விட்ட நிலையில் பொன்விழா கொண்டாடிகிறோம். அரசோ அரசதிகாரிகளோ, இன்னும் மாறாமல் அப்படியே “கருங்கல் பாறைப்போல்” உள்ளனர், என்று இராமலிங்க அடிகளாரின் கருத்தை இங்கு நினைவு கூர்வோமாக. இக்காலக் கட்டத்தில் காணப்படும் கடமை மறத்தல், ஊழலில் மூழ்கி, நிர்வாக சீர்க்கேட்டில் சிக்கி இச்சமுதாய சீரழிவில் செல்லும் என்றும் இதற்கு அரசியல்வாதிகளும் அரசு அதிகாரிகளுமே முக்கிய காரணமாக திகழ்வார்கள் என்று மிகுந்த தீர்க்க தரிசனத்தோடு இளங்கோ அடிகளாரின் கூற்றையே இங்கு நாம் பார்ப்போமாக. “அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதும்” இந்த அர்த்தமுள்ள சொல்லுக்கு இலக்கணமாக திகழ, அரசியல் வாழ்வு வேண்டிவோர்களும், அரசு அதிகாரிகளும் மட்டுமல்லாமல், ஒவ்வொரு குடிமகனும் அறமுடையோனாக மாற வேண்டும். தங்களின் வாழ்க்கையில் இதை கடைப்பிடிப்பவர்களாக இருந்தல் அவசியம் என்பது இளங்கோ அடிகளாரின் தத்துவ நியாதியாகும். அரசின் நிர்வாக சீர்க்கேடு , நிர்வாக திறமை இன்மை, நிர்வாக ஆளுமை இன்மை இவைகளை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளும் அதிகாரவர்க்கமும், வர்க்கஞ்சார்ந்த கூட்டமும் , தங்களை, தங்கள் வாழ்வை வளப்படுத்திக் கொள்வதில் மிகுந்த **அக்கறையோடு** வாழ்பவராகவும், உள்ள நிலையில் கீழ் மட்ட அரசு ஊழியர் முதல் மேல்மட்ட அரசு உயரதிகாரிகள் வரை எப்படி இருப்பார்கள் என்பதை சொல்லாமலேயே நாம் புரிந்து கொள்ளலாம்.

நாட்டின் எந்த ஒரு இடத்திலாவது ஓர் அப்பழுக்கற்ற, நேர்மையான உத்தம மனிதன் காணப்படுவானாகில் இதோ, ஓர்

உத்தம மனிதன் போகிறானென்று இராமலிங்க அடிகளாரைப் பார்த்து ஒரு துறவி கூறியதைப் போல்ச் சமுதாயம் அவ் உத்தம அரசியல்வாதியை போற்றும் அவன் புகழ் தேசம்பாடும். ஆனால் இன்று வரை அப்படிப்பட்ட உத்தமனைப் பார்க்க இயலவில்லை. அரசியல் வாதிகள் அப்படி என்றால், நாட்டில் பல்கிப் பெறுகி உள்ள பல்வேறு துறை சார்ந்த அதிகாரிகளில் ஒரு சிலர் நேர்மைவாதிகள் அங்கொன்றும், இங்கொன்றுமாக உள்ளனர். இப்படி நேர்மையான அதிகாரிகள் தோன்றினால் முளையிலேயே கிள்ளி எறிந்து விடுகின்றனர். நேர்மை மிகு பல அரசதிகாரிகள் புறக்கணிக்கப்பட்டு உள்ளனர். இத்தகையதொரு அவலமான நிலையில் நம்நாடு உள்ளது. அரசியலுக்கு வருபவர்களும், தலைமை ஏற்வருபவர்கள் அப்பழுக்கற்ற சுய நல மற்றவராகவும், நேர்மை மிக்க நபராகவும் இல்லையெனில் குதிரைக்கு இரண்டு கண்களை திறந்து விட்டால் அக்குதிரை எப்படி நாலா பக்கமும் சிதறி ஓடுமோ, அதுபோல் ஆகிவிடும். அறமுடைய ஒருவன் தலைமைக்கு வருவானெனில், தாமும் தன்னை சார்ந்த சமுதாயத்தையும், நீதி என்கின்ற இரண்டு கண் கொண்டுதான் பார்ப்பான். தான் மட்டும் அல்லாமல் தனது மக்கட் சமுதாயத்திற்கும், நீதியுடன் வாழவே விரும்புவான். அரசும், அரசு அதிகாரிகளுக்கும் இவன் சிம்ம சொப்பனமாக திகழ்வான். இவன் தனது உடமைகளை மக்களுக்காக விட்டு விடுவான். “என் உடல் பொருள் ஆவிகளை உனக்குக் கொடுத்தேன்” என்று இராமலிங்க அடிகளார் கூறியதை இங்கு நினைவு கூர்வோமாக.

ஒவ்வொரு மனிதனும் சுதந்திரத்துடனும் தன் விருப்பத்திலும் வாழ உரிமை கொண்டுள்ளான். இது அவனது ஆதார உரிமைகள் ஆகும் தனது அறிவாண்மையை வளர்த்துக் கொள்ளலாம். கௌரவமாக நடத்தப் படுவதற்கும், நல்ல வாழ்க்கையைப் பேணவும் இவை இன்றியமையாதவை அனைத்தும் ஏற்றுக் கொண்டுள்ளன.

மக்களுக்கு வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகள் பறிக்கப்படாமல் இருக்கவும், மீறப்படாமல் இருக்கவும் போதிய பாதுகாப்புத் தேவை. இந்த உரிமைகள் அரசின் தன்னிச்சையான நடவடிக்கைகளால் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும். அவனது உரிமைகள் மீறப்படும் போது நீதிமன்றங்களுக்குச் சென்று தனது உரிமைகளை நிலை நாட்ட உரிமை வழங்கப்பட வேண்டும். இந்த அடிப்படை உரிமை சாதாரண சட்டங்களை விட மேலானாவை. அரசினாலும் மீறப்பட்ட உரிமைக்கும் வேறுபாடு உண்டு. இந்த சட்ட உரிமை மீறப்படும் போது நீதிமன்றங்களில் சாதாரண சட்டங்களாலேயே அதற்குத் தீர்வு காண முடியும். அடிப்படை

உரிமைகள் ஓர் எழுதப்பட்ட அரசமைப்புச் சட்டங்களால் வழங்கப்பட்டு உத்தரவாதம் கொடுக்கப்படுபவை.

உலக வரலாற்றில் இந்தியா கடுமையான போராட்டங்களுக்குப் பின்னர் விடுதலை பெற்ற நாடாகும். இந்தியா தேசியத் தலைவர்கள் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடி வந்த காரணத்தால் அதன் அருமை பெருமைகளை உணர்ந்திருந்தனர். ஆதலால் அரசமைப்புச் சட்டத்தில் ஒரு முதன்மையான இடத்தை தர விரும்பினர். மேலும் இந்திய பல்வேறு சமயங்களையும் பல்வேறு மொழிகளையும் கொண்ட நாடாகும். மக்களாட்சியில் நாட்டில் ஒவ்வொரு தனிமனிதனின் உரிமையையும் மதிப்பது, மதித்து நடப்பது இன்றியமையாததாகும். இதன் பொருட்டு சில அடிப்படை உரிமைகளுக்கு இடம் தர வேண்டிய தேவையும் எழுந்தது. நீண்ட நெடுங்காலமாக மன்னராட்சியில் வளர்ந்த மக்களுக்கு மக்களாட்சி முறை புதியதாகும்.

இந்திய அரசமைப்பு அடிப்படை உரிமைகளை அரசின் உயர் அதிகாரப் பதவிகளில் இருப்பவர்களும் அப்பதவியை புதிதாக ஏற்பவர்களும் ஒன்றை கவனத்தில் கொள்ளுதல் அவசியமாகும். மக்களது உரிமைகளை மீற வாய்ப்பு ஏற்படாமல் அல்லது மனித உரிமை மீறல்கள் ஏற்படாமல் தடுப்பது தேவையாகும்.

## அரசியல் களம்-3

### அறஞ்சார் வாழ்வு

சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்கக் கூடியதும் சமுதாயத்திற்கு ஏதிரானதாக கருதப்படும் ஒரு செயலையும் சமுதாயத்திற்கு விரோதமான நடவடிக்கைகளும், செயல்களும் குற்றமாகும். மக்களின் உரிமைகளுக்குப் பிறர் கேடு விளைவித்தாலும், மக்களின் உரிமைக்கு ஊறு ஏற்படுத்தினாலும், அரசாங்கத்தின் ஒரு அங்கமாகத் திகழ்ந்து வரும் அரசு அதிகாரிகளைக் கொண்டு சமுதாயத்திற்கு, தீங்கு விளைவிப்போரையும், ஊறு ஏற்படுத்துவோரையும் தடுத்து நிறுத்தி மேற்கண்ட நபர்களையும் அவர்களின் செயல்களையும் முடக்கி சமுதாயத்தை பேணி காக்க வேண்டிய மாபெரும் பொறுப்பு அரசங்கத்திற்கும், அவ்வாரசாங்க அதிகாரிக்கும் உண்டு. இவர்களுக்குத் தலைமை ஏற்றிருக்கும் அரசியல்வாதிகளும் உண்டு என்பதை மறுக்க இயலாத நிதர்சனமானதொரு உண்மையாகும். மக்கட் சமுதாயத்தை பாதுகாக்க வேண்டிய கடமை எல்லா நாடுகளின் அரசாங்கத்தின் முக்கிய குறிக்கோளாக கொண்டு இயங்குகின்றனவாகும்.

மக்களின் வாழ்வை மையப்படுத்தி அவ்வாழ்வுக்கு ஊறு விளைவிப்போரை தடுக்கவும், அவர்களை தண்டிக்கவும், நாடுகள்

தோறும் நீதி மன்றங்களும் சட்ட நடைமுறைகளும் வகுக்கப்பட்டன. தனி மனித சுய நலன் சாராது, பொது நலன் சார்ந்து பொதுமைத் தன்மை வாய்ந்த்தும் ஒட்டு மொத்த மக்கட் சமுதாயத்தை காக்கும் பொருட்டு மக்களின் நலனை பிரதானே நோக்கமாகக் கொண்டு இயங்குவது தான் நீதி மன்றங்கள் சமுதாய பொது வாழ்விற்குத் தேவையான அனைத்தும் பெற்றுக் கொண்டு வாழ்வதே ஒவ்வொருவரின் லட்சியமாகும். தங்களின் குடும்ப உறவுகளை கட்டிக் காப்பதில் மிகுந்த முனைப்போடுதான் இருப்பான். இவர்களுக்கு அனைத்தையும் செய்து கொடுக்க வேன்டியக் கடமை அரசாங்கத்திற்கு உண்டு. இஃது எல்லா நாட்டின் அரசாங்கத்திற்கும் பொருந்தும் விதியாகும். மக்கள் சமுதாயத்திற்கு யாதொரு தீங்கு வராதவாறு நடந்துக் கொள்ள வேண்டியது. ஒவ்வொரு தனி மனிதனின் கடமையாகும். இதைக் கடைப் பிடிக்கத் தவறுபவர்கள் மாபெரும் தவறிழைத்தவராகிறார். மக்கட் சமுதாயத்திற்கு பாதிப்பு வருமேயானால் எந்த வகையிலும் அந்தப் பாதிப்பை ஏற்க இயலாது. அதற்கு நியாயம் கற்பிக்க இயலாது. மக்களுக்கு பாதிக்கும் எந்த ஒரு செயலும் எந்தச் செயலும் எந்தவிதமான நடவடிக்கைகளையும் ஏற்றுக் கொள்வது என்பது அறிவின்மையை காட்டுவதோடு மட்டுமல்லாமல் மக்களின் மீது ஒன்றை திணிக்க நினைக்கின்றார்கள் என்பதுதான் அதன் உள்ளார்ந்த அர்த்தமாகிறது. மக்களை பாதிக்கும் விசயங்களையும், செயல்களையும், நடவடிக்கைகளை நீதிமன்றம் தன் அதிகார சட்டத்தின் மூலம் தடுக்கவோ அல்லது அடக்கவோ நிறுத்திவைக்கவோ முற்படும். குற்றமானசெயல்கள் எவையென வகைப்படுத்தி, அதற்கேற்றவாறு உரிய தண்டனைகளை வழங்கும். குற்றம் பழிச் செயலோ அல்லது பாவச் செயலாகவே இருப்பினும் அதைப் பொதுவாக குற்றமென நாம் கருதுகிறோம். குறிப்பாக திருட்டு, கொலை, கொள்ளை அபகரித்தல், வஞ்சித்தல், கற்பழித்தல் இது போன்ற வேறு எந்த ஒரு வகையினால் வரும் செய்கைக் குற்றமெனக் கொள்வார்.

குற்றம் செய்பவரும் குற்றத்துக்கு உடந்தையாக இருப்பவரும், தூண்டுபவரும் குற்றவாளிகளாகவே கருதப்படுவார்கள். பாலில் நீர்க் கலந்தால் குற்றம், உணவுப் பொருட்களில் கலப்படம் செய்தல் குற்றம், வரி செலுத்த வேண்டியவர்கள் தங்கள் வருமான வரியை செலுத்தத் தவறினால், வருமான வரிக் குற்றம், கள்ளச் சந்தையில் வணிகம் செய்தல் குற்றம், மருந்து மாத்திரையில் கலப்படம் செய்தால் குற்றம், மக்களின் அன்றாட அத்தியாவசியப் பயன்பாட்டுப் பொருட்களில் அதிக விலை வைத்து விற்றால் குற்றம், இயற்கை வளங்களை அழித்தல் குற்றம், பிராணிகளை கொல்லுதல் குற்றம், காடுகளையும், காட்டுவாழ் மிருக உயிரினங்களையும்,

மரங்களையும் அழித்தல் குற்றமாகிறது. இங்ஙனம் இன்னும் பல்வேறு விதமான இனங்களின் குற்றங்கள் அங்கிங்கெனதான படிபிரகாசமாய் நாட்டில் நடந்து வருகிறது. ஒவ்வொரு நாளும் நாட்டில் எந்த ஒரு பகுதிலாவது. குற்றம் நடைபெற்றுக் கொண்டே வருகிறது என்பது யாவரும் அறிந்த உண்மையே அதை தடுக்கச் நடக்கச் செய்யும், பொறுப்பு அரசிற்கு உண்டு. அரசங்கத்தின் முழு பொறுப்பையும் தலைமேல் ஏற்று அதை செயல் படுத்த வேண்டிய பொறுப்பு மிக்க அதிகாரியாகி விடுகிறார். மக்களின் வாழ்வை செம்மையாக இருக்க வேண்டும். என்ற குறிக்கோளை மையமாக வைத்துச் சட்டம் இயற்றப்படுகிறது. மக்களின் உரிமைகளை பாதிக்கும் செயல்களை சட்டத்திற்கு மாறான புறம்பான செயல்கள் என்று அறிந்தும் அதை தவிர்க்க முயல்வதில்லை. இவைகளையும் முகமாகவே நல்ல பண்பினை வளர்த்துக் கொள்ளவும் தான், நாம் அறவோரை நாடுகிறோம். அறவோர் சொல் அனைத்தும் நீதி வழுவாமையாகும். நீதி மன்றங்கள் ஏற்று கையாளுகின்றனவோ அவை அனைத்தும் நாட்டின் ஒட்டு மொத்தமாக அனைவருக்கும் சமமே. எல்லோர்க்கும் நீதி ஒன்றுதான் பல நீதி இல்லை. நீதிக்கு முன் அனைவரும் சமம். நாட்டின் முதல் அரசன் வரை நீதிக்கு தலை வணங்க வேண்டும்.

குற்றமிழைக்கும் எந்த ஒரு நபரும் சட்டம் விதிக்கும், தண்டனையை ஏற்றுக் கொள்ள வேண்டும். தனது செல்வத்தையோ, செல்வாக்கையோ பயன்படுத்தி தப்ப முயற்ச்சிக்கக் கூடாது. சட்டம் தனக்கு உரிய வழியில் செல்கிற பொழுது தான் அனைவருக்கும் பொதுவான பாரபட்சமற்ற வேற்றுமை வாட்டாத நீதி முறையை நிலை நிறுத்த இயலும். பாண்டிய மன்னன் நீதி தவறாயதால் தான் கோவலன் கொல்லப்பட்டான். கண்ணகித்தாய் மதுரையை எரித்தார். இங்கு பொற்கொல்லன் பேச்சைக் கேட்டு நீதி ஆராயாமல் கோவலன் அரசியின் காற் சிலம்பை திருடியக் கள்வன் தானா என்று ஆராய்ந்து பார்க்காமல் செய்ததின் விளைவு தான் கோவலனுக்கு அநீதி இழைக்கப்பட்டது. கண்ணகி வெகுண்டால் மதுரை எரிந்தது என்று இளங்கோவடிகளார் நீதிக் கேட்கிறார். இஃது எக்காலத்துக்கும் பொருந்துவதாகும்.

மக்கள் உயிர் வாழ்வதற்காக, நிலை கொண்டிருப்பதற்காகவும், அவர்கள் உண்ண, உடுக்க குடியிருக்க வீடு உள்ளிட்ட இத்தியாதிகளை தங்களுக்குத் தாங்களே தேவையான அடிப்படையான உணவு தானியங்களை உற்பத்தி செய்வது உடைகளை தயாரிப்பது குடியிருப்புகளை கட்டிக் கொள்வது இதற்குத் தேவையான கருவிகளையும்

தயாரிக்கின்றனர். மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தும் தயாரிக்கின்றார்கள் அல்லது உற்பத்தி செய்கின்றார்கள். மனிதன் தனது செயல்பாட்டிற்கு ஒரு குறிக்கோளை அமைத்துக் கொள்கிறான். அக்குறிக்கோளை அடைவதற்கு ஒரு திட்டத்தை வகுத்துக் கொள்கிறான். அத்திட்டத்தின் படி செயலாற்றுகிறான். இத்தகைய ஒரு செயல் முறை மனிதனுக்கு மட்டுமே அமைந்துள்ள சிறப்பான அம்சமாகும். இது பண்டைய காலம் முதல் இன்றைய விஞ்ஞான காலத்திலும் தொடர்கிறது. மனித உழைப்பு மனிதனுடைய உணர்வு நிலையுடன் தொடர்பு கொண்டிருக்கிறது மனிதனின் உணர்வு நிலை பேச்சுடனும், மொழியுடனும் மிக நெருக்கமான தொடர்பு கொண்டிள்ளது. மனிதன் பேச்சின் மூலமும் மொழியின் மூலமும் இதர மனிதர்களுடனும் தொடர்புகள் வைத்துக் கொண்டான். அதன் மூலம் தனது சிந்தனைகளை வெளிப்படுத்திக் கொண்டான். மற்றவர்களுக்கு தெரியப்படுத்துகிறான் மொழி பேச்சு என்பது மனிதர்களுக்கு உள்ள ஒரு சிறப்பியலாகும். ஒவ்வொரு தலைமுறையும் வளரும்போது அதன் கூட்டு நடவடிக்கைகளில் பங்குகொள்வதற்காக ஒரு மொழியை கற்றுக் கொள்ள வேண்டி உள்ளது. மக்கள் தங்கள் செயல்பாடுகளுடனும் தங்களுடைய பரஸ்பர உறவுகளுடனும் ஒரு சமுதாயமாக அமைகிறான். மனிதன் வாழ்க்கையைப் படித்து ஆராய்கிறான். எத்தனை எத்தனையோ வகையான சக்தி ஆற்றல்களையும் அதற்காக ஆதாரங்களையும் கண்டு பிடிக்கின்றான். விண்வெளி ஆராய்ச்சி, அண்டவகை, ஆய்வுகளை கண்டுபிடித்துக் கொண்டே வருகிறான். மக்கள் அறிவு வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அறிவு முதிர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும். அப்போது தான் அவர்கள் உலகை ஆராய்ந்து அறிந்து அதன் மூலம் மக்கள் குலத்திற்காக மகத்தான நன்மைகளை புரிவதற்கு இயற்கை உணர்வுபூர்வமாக மனித சமுதாயத்தைப் பற்றியும் தன்னைப் பற்றிய அறிவு பெற்றிருக்க வேண்டும் அதை வளர்க்க வேண்டும். மனித குலத்தின் வரலாறு என்பது தனிப்பட்ட தற்செயலான நிகழ்ச்சிகளின் குவியல்கள் அல்ல ஒரு திட்ட வட்டமான நிகழ்வு போக்காகும். கீழ்நிலையில் இருந்து மேல் நிலைக்கு இட்டுச் செல்வதாகும். சாதாரண நிலையிலிருந்து உயர்ந்த நிலையான வகைகளுக்கு சமூக பொருளாதார அமைப்புகளுக்கு மாறிச் செல்வதாகும். மனித குலத்தின் வரலாறு என்பது ஒன்றன்பின் ஒன்றாக தலைமுறை வழியாக சமூக பொருளாதார அமைப்பு முறைகள் ஒவ்வொன்றின் கட்டமைப்பு முறையைப் பற்றி ஒரு முழுமையான ஞானத்தைப் பெற வேண்டியது அவசியம். ஒரு சமுதாயத்தில் செயல்படும் அனைத்து சக்திகளின் பரஸ்பர செயல்பாடுகளைப் பற்றிய முழுமையான ஞானத்தைப் பெற வேண்டியது மிக அவசியமாகும்.

**<u>அரசியல் களம் -4</u>**

## ஜமீன் தாரி முறை

இந்திய நாடு கிழக்கிந்திய கம்பெனியின் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு அவை 1)வங்காளம், 2) பம்பாய், 3) மதராஸ் என வகுக்கப்பட்டது. அதில் வங்காளத்தில் உள்ள வில்லியம் கோட்டை, மதராஸின் ஜார்ஜ்கோட்டை, பம்பாய் ஆகியவை இந்தியாவின் தலைமைச் செயலகங்களாக விளங்கின. உள்ளாட்சி நிர்வாகம் வங்காளத்துக்கு அளிக்கப்பட்டு இந்திய கவர்னர் ஜெனரல் வங்காள வில்லியம் கோட்டையில் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. பம்பாய் மதராஸ் கவர்னர்கள் நியமிக்கப்பட்டனர். பம்பாய் மதராஸ் கவர்னர்கள் இருவரும் வங்காள கவர்னர் ஜெனரலுக்கு கட்டுப்பட்டு நடக்கக் கடமைப் பட்டவர்களாக ஆகிறார்கள். இவர்கள் உள்துறை, நீதித்துறை, வருவாய்த்துறை, போக்குவரத்துத்துறை, அயலுறவுத்துறை என்ற நிலைப்பாட்டை வகுத்து அரசாங்க அதிகாரிகளைக் கொண்டு நிர்வாகம் செய்தார் இந்திய அரசாங்கத்தின் பெயரிலயே வரி வசூலித்தார்கள். வசூலிக்கப்பட்ட வருவாயை தலைமை கருவூலத்திற்கு மாற்றப்படும் ஒரு மாகாணத்தின் உபரி வருவாயைக் கொண்டு பற்றாக்குறை உள்ள மாகாணத்தில் பற்றாக்குறை சரி செய்யப்பட்டது. இவர்கள் காலத்தில் நிர்வாகம் சீராக இருந்தது. ஊழல் என்ற பேச்சிற்கு இடம் இல்லை.

கிழக்கிந்திய நிர்வாகத்தின் கீழ் இங்கிலாந்து அரசாங்கம் விவசாயிகள், சிறுவிவசாயிகள், குறுவிவசாயிகளை பாதுகாப்பதற்காக இங்கிலாந்து நாட்டில் உள்ள நில பிரபுத்துவமுறையை இந்தியாவில் நடைமுறை படுத்த எண்ணி அத்திட்டத்தை நிறைவேற்றவும் செய்தார்கள். இத்திட்டம் தான் ஜமீன்தாரி முறை எனப்பட்டது. நிலங்கள் அனைத்தும் அப்பகுதியில் நியமிக்கப்படும். ஜமீன்தார் வசம் ஒப்படைக்கப்பட்டு நிலத்தின் மீது அக்கறை கொள்ளுமாறு செய்தார்கள். தங்கள் நிலத்தில் வேலை செய்யும் விவசாய கூலிகள் முதல் சிறு விவசாயிகள் வரை அக்கறை பிறக்கும் அவர்களின் நிலங்கள் பாதுகாக்கப்படும் என்று நல்ல விளைவுகள் ஏற்படும் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் நம்பியது. 1973ல் முழு நம்பிக்கை உடன் ஜமீன்தார்கள் நியமனம் மாவட்டங்களில் நடைபெற்றது. (இது இந்தியா முழுவதிலும் நடைபெற்றது). இங்ஙனம் சாதாரணமாக இருந்த குடியானவன் முதல் அதிகாரிகள் வரை ஜமீன்தாரிகளாக நியமிக்கப்பட்டு நிலவுடமையாளைகளாக ஆக்கப்பட்டனர். பலர் சிறப்பு நியமனத்தின் மூலமாக அப்பதவியை பெற்றனர். ஜமீன்தார்கள் மூலமாக வரி வசூலிக்கப்பட்டது. இவ்வாறாகத்தான் இந்தியாவில் ஜமீன்தார் முறை உருவானது. இங்கிலாந்தின் அரசாங்கத்தின் நோக்கம் நல்ல நோக்கம் தான். ஆனால் அது இந்தியாவில் நிறைவேறாமல் போய் விட்டது. ஜமீன்

தாரிகள் நிலவுடமையாளர்கள் ஆனதுமே. வேற்றுமை மனப்பான்மை வளர்ந்தது. பலர் விலை மதிப்புமிக்க நிலங்களை தந்திரமாக தங்களின் பெயர்களிலும் தங்கள் குடும்பத்தாரின் பெயர்களிலும் மாற்றிக் கொண்டனர். இந்தியாவில் சுமார் 70% சதவீத நிலங்களும் சொத்துக்களும் இவர்கள் வசம் போயிற்று.

## அரசியல் களம்-5

### அறஞ்சார் வாழ்வு- சாதி

சாதி சமய கொடுமைகள் வெறும் உணர்வு தளத்தில் மட்டும் செயல்படுவதில்லை. மக்கள் வாழும் இடம் சார்ந்ததும் தீர்மானிக்கப்படுகிறது. நிலவுடைமை நிலம் என்பது நிலவுடைமை சமூக அமைப்பு என்னும் சொத்து சார்ந்த கருத்து நிலை உருவாக்கப்பெற்றது. சிலருக்கு நிலங்கள் அதிகமாக உள்ளதால் அது பூமியின் மீதான சொத்தாக உருவெடுத்துள்ளது. இது இவர்களுடைய பூர்வீக சொத்து என்று கற்பனையான கதையும் புகுத்தப்பட்டது.(கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சியின் இந்தியா அடிமைப்பட்டு கிடந்தபோது பிரிட்டிஷ் அரசாங்கத்தால் உருவாக்கப்பெற்ற ஜமீன்தாரி முறையின் காரணமாக இந்தியாவில் பலர் நிலவுடமையாளர்களாக ஆக்கப்பட்டார்கள்)

பொது நிலப்பகுதிகளை தங்களுக்குச் சாதகமாக சுற்றி வளைத்துக் கொண்டு விட்டனர். இவர்கள் வளைத்துக் கொண்ட நிலங்களை பட்டா நிலம் என்றாகிவிட்டது. பாக்கி பட்டா அல்லாத நிலம் என்றாகி விட்டது(அதாவது புறம்போக்கு நிலம் என்று கூறப்பட்டது). இது ஆதிக்க அதிகாரம் மிக்க சக்திகள் ஏற்படுத்திக் கொண்ட சமூகக் கொடுமையாகும். இதனால் பட்டா குடியிருப்புப் பகுதி என்றும், பட்டா அல்லாத பகுதி புறம்போக்குக் குடியிருப்புப் பகுதி என்றும் பிடிக்கப்பட்டது. இது மிகத் தந்திரமாக்க் கையாண்டனர். இதன் மூலம் சாதி அடையாளம் மிக எளிதில் காணப்பட்டது ஆக சாதி அடையாளம் மிக எளிதில் காணுவதற்காகவே நில அமைப்பு பல்வேறு பிரிவுகளாகப் பிரித்தனர். நிலங்கள் பிரிந்து சாதி அடையாளம் காணப்பட்டதோடு அல்லாமல் இந்த இடத்தில் குடியிருப்போர் இன்ன சாதி என்ற அடைமொழியும் வகுக்கப்பெற்றது. இச்சாதி உறவுகள் இன்றும் படிப்படியாக அழிந்துபோகாமல் காப்பாற்றிக் கொண்டு வருகிறார்கள். இதன் அடிப்படையில்தான் ஊர் அமைப்பு, கிராமப்புற அமைப்பு, குடும்ப அமைப்பு, குடும்ப உறவு, குடும்ப வாழ்க்கை பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேல் கீழ் என்பது உயர்வு தாழ்வினை குறிக்கும் உயர்ந்த சொற்களாகும். இதனை ஊருக்கு மேல்புறத்தில் வாழ்பவர்கள் சாதியில் உயர்ந்தவர்களாகவும் அடக்கி ஆளும் ஆதிக்க சக்திகளாகவும்

இருக்க வேண்டும் என்பது ஒவ்வொர் ஊரிலும் எதிர்பார்க்கப்படுகிறது. மக்கள் தங்கள் வாழ்வை நிலவுடைமையாளர்களைச் சார்ந்தே உள்ளது. இவர்களின் வயல்களில் வேலை, தோட்டத்தில் வேலை, வீட்டின் வேலை, மாட்டு தொழுவத்தில் வேலை, மாடுகள் ஆடுகளை மேய்த்தல், இவ்வாறு இன்னும் பற்பல வேலைகளை செய்து கொத்தடிமைகளை போல் மிக இழிந்தநிலை அடிமைகளாக வாழ்ந்தார்கள். தங்களின் பொருளாதார நிலையை தக்க வைத்துக்கொள்ளவும், தங்களின் சாதி இன அமைப்பு உறவு குடும்ப வாழ்க்கையை பேணிப்பாதுகாக்கவும் தங்களின் வாழ்வாதாரங்களை மையப்படுத்தியே நிலவுடமையாளர்களிடம் அடிமை வேலைக்கு அமர்வதை தவிர வேறு வழியில்லை. தாழ்த்தப்பட்ட மக்கள் அடிமை வாழ்க்கையை வாழ்ந்தார்கள். இது இக்காலத்தில் மட்டுமல்லாமல் சோழ மன்னர்களின் ஆட்சியிலும் அடிமைகள் கால்நடைகளைப் போலவே ஆட்சியிலும் அடிமைகள் கால்நடைகளை போலவே இவர்களும் வாழ்ந்தனர். சோழர்களின் ஆட்சியில் தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் ஊரின் கிழக்கில் குடி அமர்த்தப்பட்டனர். இவ்விடம் தவிர வேறு பகுதியில் வசிக்க உரிமை அற்றவர்களானார்கள் சோழர் ஆட்சியில் எந்த சாதியினர் வலிமை பெற்றவர்களாக விளங்கினார்களோ அவர்களே நிலத்தின் மீது உரிமை பெற்றனர் நிலவுடமையாளர்களாகவும் இருந்தனர். கொத்தடிமைகளின் எஜமானனாகவும் இருந்தனர். அரசாங்க அதிகாரமும் சமய செல்வாக்கும் ஒருங்கே குவியப் பெற்றவர்கள் தங்கள் வாழ்நாளில் என்றும் அமைதியாக இருந்ததில்லை. பிறரை துன்புறுத்திப்பார்பதில் அவர்களுக்கு அலாதியான இன்பம் பிறர் சொத்தை அபகரித்தல், இளம் பெண்களை அபகரித்தல், பிறர் மனைவியை அபகரித்தல் போன்ற நீதிக்கும் தர்மத்திற்கும் புறம்பான கேடுகெட்ட செயல்களை சகல விதமான அங்கீகாரத்துடன் செய்தார்கள். பல்வேறு துன்புறுத்தலுக்கும் சுகபோகங்களில் மூழ்கி கிடப்பதும் அதற்கு இம்மக்களை பலிகடாவாக்கினார்கள் என்றால் மிகையாது.

சோழ மன்னர் காலத்தில் மேல் சாதி சமூகம் ஆதிக்க சமூகமாக இருந்தது. தாழ்த்தப்பட்ட சாதிகள் அனைவரும் சமூகத்தில் கீழான அடிமைகளாகவும், அடிமை சாதியாகவும் இருந்தது. இவர்கள் ஒன்றோடு ஒன்றுடன் கலக்க இயலாது காரணம் பலகட்டுப்பாடுகள் நெறிமுறைகளை வர்ணாசிரமம் வகுத்தது. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் போன்ற ஆதிக்க சாதியினராயினர். பறையர், தச்சர், குயவர், தட்டார், உவச்சர், தறியாளர்கள் இறக்குவோர், சக்கிலியள் இன்னும் பற்பல பிரிவுகள் உள்ளன. இம்மக்கள் அனைவருமே கீழ்சாதி மக்களாக்க் கருதப்பட்டனர். இவர்கள் அனைவருக்கும் நிலம் இல்லை.

நீண்டகாலமாகவே நிலமற்றவர்களாக உள்ளனர். இன்றும் இதே நிலை தொடர்கிறது. சோழர்காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களை பல்வேறு பிரிவினரால் விற்கப்பட்டும், தானமாக வழங்கப்பட்டும், தங்களைத் தாங்களே விற்றுக் கொண்டும் அடிமைகளாக வாழ்ந்தனர். பஞ்சத்தினால் பிறரிடம் கடன் பட்டும் அக்கடனை தீர்க்க வழியில்லாமல் அவனுக்கே அடிமையாகவும் காலம் முழுவதும் அடிமைகளாகப்பட்ட கொடுமையும் சோழர்காலத்தில் இருந்தது.

சோழர் காலச் சமுதாயத்திலும் சங்க கால கட்டத்திலும் உயர்வு தாழ்வு கற்பித்து உயர் சாதி, கீழ்சாதி ஆகிய இரண்டு நிலை இருந்தது. சாதிகளின் அமைப்பு உச்சம் பெற்று விளங்கியது. ஒவ்வொரு சாதிக்கும் தனித்தனி சுடுகாடு இருந்தது. ஈழச்சேரி, பறைச்சேரி, வெள்ளாளன் சுடுகாடு, பறைசுடுகாடு என்று உள்ளது. பிரம்மதேயம் இது பிராமிணர் பகுதி வேளாளர் வாழ்ந்த பகுதி, வணிகர் வாழ்ந்த பகுதி, பறைச்சேரி வாழ்ந்த பகுதி, ஈழச்சேரி, வண்ணான்சேரி இத்தகைய அடையாளங்கள் குடியிருப்பு தொடங்கி சுடுகாடு வரை சாதி அடையாளங்கள் காணப்பட்டது. சங்க கால சோழர் காலத்தில் சாதியை போற்றுபவர்களாக இருந்தனர் இவ்வாறு கீழ்சாதி மக்களின் வாழ்க்கை அடிமைகளாகவே வாழ்ந்தனர். கால்நடைகளைப் போலவே இம்மக்களும் வாழ்ந்தனர். சோழர்கள் ஆட்சிகாலத்தில் கீழ்சாதி மக்கள் அனைவரும் ஊரின் கிழக்கில் குடியமர்த்தப்பட்டனர். இவ்விடம் தவிர வேறு பகுதியில் வசிக்க உரிமை அற்றவர்களாகின்றனர். இங்ஙனம் ஓர் குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட சாதியின் அடைமொழி சுட்டிக் காட்டப்படும். சூழ்நிலையிலேயே கீழ்சாதி மக்கள் அனைவரும் குடியிருக்கவும் வேண்டிய கட்டாய வாழ்க்கை குடியிருப்புக்கு ஆளானார்கள். சோழர்காலத்தில் எந்த சமுதாயத்தில் வலிமை பெற்றதோ அந்த சமுதாய சாதியே நிலத்தின் மீது உரிமை பெற்றிருந்தனர். நிலவுடைமையாளர்களாகவும் கொத்தடிமைகளின் எஜமானனாகவும் இருந்தனர். அரசாங்க அதிகாரமும் சமய செல்வாக்கும் ஒருங்கே குவியப் பெற்றவர்கள் தங்கள் வாழ்நாளில் என்றும் அமைதியாய் இருந்ததில்லை பிறரை துன்புறுத்துதல், பிறர் சொத்துகளை அபகரித்தல், பெண்களை அபகரித்தல் உள்பட பல கேடுகெட்ட நீதிக்கும் தர்மத்திற்கும் புறம்பான செயல்களை தான் செய்து கொண்டிருந்தனர்.

இந்தியாவில் மன்னர்களின் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட காலத்தில் கடைசியாக மொகலாயர் ஆட்சிக்குப் பின் கிழக்கிந்திய கம்பெனிகளின் ஆட்சியில் நிலவுடமையாளர்களின் ஆதிக்கமானது மாறவில்லை. இங்கிலாந்தின் ஆட்சிக்குக் கட்டுப்பட்டு

நடப்பவர்களாகத் தங்களை காட்டிக் கொண்டார்கள். இதன் மூலம் நிலபிரபுக்களும் நிலவுடமையாளர்களும் கிராமத்தின் மீதும் கிராம மக்களின் மீது கிராமத்தில் உள்ள நிலங்களின் மீதும் தங்கள் ஆதிக்கத்தைப் பேணிகாக்கவும், கிராமத்தையும், மக்களையும், நிலங்களையும் தங்கள் கட்டுப்பாட்டிலயே வைத்திருக்க திட்டமிட்டு செயல்பட்டனர்.வரி வருமானங்கள் பெருக்குதல் , தங்கள் சமூக உயர்குல மரபுமக்களின் ஆதரவை பெற்றுக் கொள்ளுதல் ஆகியவை அவர்களின் நோக்கமாக அமைந்தது. அரசாங்கம் விதிக்கும் வரியை செலுத்துவதற்காக பழைய இராயத்துவரி முறையில் மேலாதிக்க உயர் சாதியினராகிய மிராசுதாரர்கள், நிலப்பிரபுக்கள் நிலத்திம் மீது தங்களின் ஆதிக்க நிலையை வலுப்படுத்திக் கொள்ளும் பொருட்டு வரிசெலுத்த தயாரானார்கள். அரசாங்க வரியை செலுத்தியதின் மூலமாக மிராசு, ஜமீன்தார், நிலவுடமையாளர்களுக்கு மேலான நில உரிமைகள் பெறும் வாய்ப்பைப் பெற்றனர்.

இங்கிலாந்து அரசாங்கம் பொது நிலங்கள் அனைத்துமே அரசாங்கத்திற்குச் சொந்தமானது என்று உத்தரவை அரசு அறிவிப்பதற்கு முன்னர் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களையும், கட்டுப்பாட்டில் இல்லாத வேறு வகை பிரிவை சேர்ந்த நிலத்தில், வேறு நபர்கள் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்தால் உடன் ஜமீன், மிராசுகள் தாங்கள் அந்நிலத்தில் பயிர் செய்யப் போவதாகவும் அதற்குரிய வரியை அரசாங்கத்திற்கு செலுத்துவதற்குத் தயாராக இருப்பதாகவும் கூறி, அரசிற்கு வரியை செலுத்தி அந்நிலங்களை தனக்கு சொந்தமாக்கிக் கொண்டனர். இப்பழக்கத்திற்கும் நடைமுறைக்கும் எதிராக 1850 ஆங்கில அரசு பொது நிலங்கள் அனைத்தும் அரசுக்கு சொந்தம் என அறிவித்தது. பின் நில பிரபுக்களுக்கும் அவர்கள் வசம் உள்ள நிலங்களுக்கும் இடையூறு ஏற்படாத வண்ணம் நடந்து கொண்டது. விவசாய கொத்தடிமை முறைக்கு எதிராக போராட்டம் தொடர்ந்ததால் கொத்தடிமை முறைக்கு எதிராக சட்டம் கொண்டு வரப்பட்டு கொத்தடிமை முறை ஒழிக்கப்பட்டது. குத்தகை விவசாயிகளுக்கு நில உரிமை வழங்கும் திட்டம் கொண்டு வரப்பட்டதால் சுமார் 20 மில்லியனுக்கு அதிகமான குத்தகை விவசாயிகள் நிலவுடமை கொண்டு வரப்பட்டது. 1961க்குள் இச்சீர் திருத்தத்தினால் நிலவுடமையாளர்கள் தங்களுடைய நிலங்களை பாதுகாக்க ஏராளமான குத்தகை விவசாயிகளை நிலத்தைவிட்டு வெளியேற்றி விட்டனர். பின்பு நிலங்களை தங்கள் உறவினர்களின் பெயரிலும், பொய்யான நபர்களின் பெயரிலும், பொய்யான நபர்களின் பெயரிலும் நிலங்களை பிரித்துக் கொண்டனர். குத்தகை விவசாயி சிறுகுறு நிலவுடமையாளர்கள் வரம்பு நிர்ணயிக்கப்பட்டன. ஆனால் உழைப்பவர்க்கே நிலம் சொந்தம் என்ற கொள்கை நிறைவேறவில்லை. காலனி ஆட்சிக்குப் பின் இந்தியாவில்

கொண்டு வரப்பட்ட திட்டங்கள் பெரும்பான்மை அரசியல் சார்புடையனவாக இருந்தாலும் நிர்வாகம் புதிய விவசாய பொருள் உற்பத்தி செய்தல், இரசாயன பொருள் உற்பத்தி பயன்படுத்தி விளைச்சலைப் பெருக்குதல், நிலத்தின் தரத்தை உயர்த்துதல், நிலவுடமையாளர்களின் அதிகம் அக்கறை செலுத்தினார்கள் அன்றி நிலத்தில் பாடுபடும் விவசாய கூலித்தொழிலாளர்களைப் பற்றி கவலையோ கவனமோ கொள்ளவில்லை.

**நூல் எழுதுவதற்கு உதவிய நூல்கள்**


நூல் பெயர் : இந்திய அரசியல்.

ஆசிரியர்.Dr.முத்துராமன்.M.A.Ph.D

நூல் பெயர் :பணியாளர் தொகுதி. ஆசிரியர்.

சோமசுந்தரம்.M.A

நூல் பெயர் : அரசியல் விஞ்ஞானத்தின் அடிப்படைகள்.

ஆசிரியர். A.N.யாக்கோவ்லெவ்,

தமிழில் A. சீனிவாசன்

நூல் பெயர் : Dr. அம்பேத்கார் நூல் தொகுதி